Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P. 2333
(சி-2854)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 9 சனிக்கிழமை (24-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 348

## ஜே.வி.பியின் தலைவர் சோமவன்சவை கைதுசெய்க சிஹலஉறுமய கோரிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டுமென சிஹலஉறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறியது அவர்மீதுள்ள முதலாவது குற்றமாகும் எனவே இந்த சட்டவிரோத செயலுக்காக அவரை உடனடியாக கைதுசெய்து விசாரணைக் குட்படுத்தவேண்டும்.

பொதுஜன ஐக்கியமுன்னணியும், ஜே வி பியும்செய்து கொண்டுள்ள உடன்பாட்டை அடுத்தே அவர் நாடு திரும்பியுள்ளார். இவரது வரவின்

[08ம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.கட்சியின் செயற்பாடே ஜே.வி.பியை ஆயுதம் ஏந்த வைத்தது

### பிரசாரக்கூட்டத்தில் சோமவன்ச உரை

(களுத்துறை)

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேண்டப்படாத நடவடிக்கைகள் தான் மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி.பி) ஆயுதம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட வேண்டி இருந்ததுஎன்று ஜே வி பி தலைவர் சோமவன்ச அமர சிங்கதெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு ஐக்கிய தேசியக்கட்சி மீதுகுற்றம் சாட்டினார்.

இக் கூட்டத்தில் ஜே வி பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச, ரில்வின்சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இக்

(8ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது

# நாட்டில் இரத்த ஆறு ஓடுவதை தடுத்து நிறுத்த உதவுங்கள்!

## உலகத் தலைவர்களிடம் ரணில் வேண்டுகோள்

(நமது நிருபர்)

**டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ளபன்னிரண்டாவது பொதுத் தேர்தலுக்கு இன்னமும் பதினொரு நாள் இருக்கையில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் உச்சக் கட்டத்தை அடைந்து நாட்டில் இரத்த ஆறு ஓட இருப்பதால் அதனை உடன் தடுத்து நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் உட்பட உலக நாட்டுத் தலைவர்கள் பலரிடமும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கொலை என்றால் கொலை அடி என்றால் அடி என்று திஸமகராமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியுள்ளார்

இத்தகைய இவரது பேச்சு மக்கள் மத்தியில் கொலை அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சித்யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் றெஜினோல்ட் ஆகியோருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்; இதுவரை இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளில் எமது வேட்பாளர் ஒருவர் உட்பட 18 பேர் கொல்லப்பட்டும் 180 ற்கும் அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர்.

பொதுத்தேர்தலுக்கு 11 நாட்கள் இருக்கையில் ஜனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய பேச்சு தேர்தலில் நிற்கும் கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கு விடும் கொலை அச்சுறுத்தல்களாக இருப்பதால் உலக நாட்டுத் தலைவர்கள் இந்த விடயத்தில் தலையிட்டுஅதிகபட்ச இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்து இரத்தக்களரி ஏற்படுவதைத் தடுக்க வகை செய்யவேண்டுமென அக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## பாக்கியநாதனுக்கு எதிரான ஈ.பி.டி.பியின் மனு தள்ளுபடி

(கொழும்பு)

கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல்செய்திருந்த வேட்பு மனுவை நிராகரிக்குமாறு கோரி ஈ பி டி.பி தாக்கல் செய்திருந்த இரு மனுக்களை மேல் முறையீட்டு நீதிமன்றம் செலவுத் தொகையின்றி நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

பனை அபிவிருத்திசபையின் தலைவராக பதவி வகித்த பாக்கியநாதன் தனது பதவியை இராஜினாமாச் செய்யாமல் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதை நிராகரிக்குமாறு ஈ.பி.டி.பி யின்

(08ம் பக்கம் பார்க்க)

## பிரதமரல்லது ரணிலை கொல்ல அரசு திட்டம்

### திஸநாயக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, அல்லது எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகிய இருவரில் ஒருவரைக் கொலை செய்வதற்கு அரசாங்கம் சதித்திட்டம் தீட்டி வருவதாக முன்னாள் சமுர்த்தி அமைச்சரும் முன்னாள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டவருமான எஸ் பி. திஸநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இச்சதியின் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர் மங்களசமரவீரா உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முக்கியஸ்தர்களும் பங்குகொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

எஸ். பி. திஸநாயக்கா

(8ம் பக்கம் பார்க்க)

## சரத்முனசிங்காவிற்கு பாதுகாப்பு வழங்கலாமா? உயர்நீதிமன்றம் கேள்வி

(கொழும்பு)

முன்னாள் பிரதி சபாநாயகரும் தற்போது ஐக்கியதேசியக்கட்சியில் இணைந்துள்ளவருமான பிரிகேடியர் சரத்முனசிங்காவிற்குப் பாதுகாப்புவழங்க முடியுமா? முடியாதா? என்பது குறித்து இராணுவத் தளபதி பல்லேகல்லவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சதிரானந்த டி சில்வாவும் எதிர்வரும் 30ம் திகதி வெள்ளிக்கிழமை பதிலளிக்க வேண்டுமென்று கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தனது பாதுகாப்பு தொடர்பாக சரத் முனசிங்க தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை அடுத்தே உயர் நீதி மன்றம்

(8ஆம் பக்கம் பார்க்க)

### ★ துப்பாக்கி முனையில்

## வாக்காளர் அட்டை அபகரிப்பு குருநகர் பகுதியில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதமதபால் ஊழியரை மிரட்டி குருநகர்அடம்பன் வீதிப்பகுதியில் வைத்துவாக்காளர் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நேற்றையதினம் 2.00மணியளவில் அடம்டன் வீதிப்பகுதியில் வாக்காளர் அட்டைகளை விநியோகம் செய்து கொண்டிருந்தசமயம் இனம் தெரியாத நபர் தபால் ஊழியரிடமிருந்து அதனைப்பறிக்க முற்பட்டபோது பிரஸ்தாப தபால்ஊழியர் அதனைத் தடுக்கமுனைந்தபோது கைத்துப்பாக்கியைஎடுத்துக்காட்டி மிரட்டி 260வாக்காளர் அட்டைகளைப் பறித்து சென்றதாகக் கூறப்பட்டுள்ளது:

இவ்வாறான சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் கொக்குவில் பகுதியில் இடம்பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-10,230)

## ஏ.எல்.பரீட்சை முடிவுகள் நாளை

(கொழும்பு)

2001ம் ஆண்டுஆகஸ்ட்மாதம் நடைபெற்ற க.பொ.த.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

க.பொ.த உயர்தரப்புள்ளிகளின் அடிப்படையில் 2000ம் ஆண்டு நேர்முக பரீட்சைக்கு தோற்றி இதுவரை ஆசிரியர் நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 11 மணிக்கு யாழ் புதியஉயர் கல்லூரிவிரிவுரை மண்டபத்தில நடைபெறவுள்ளது.

நியமனம் கிடைக்காதசகலரையும் தவறாது சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## தேர்தல் கடமை கடிதம்

(யாழ்ப்பாணம்)

தேர்தலகடமைகளில் ஈடுபடவிருக்கும் கல்விசார்உத்தியோகத்தர்களுக்கான நியமனக்கடிதங்கள் யாழ் கல்வி வலயத்திற்கு நேற்றுஎடுத்து வரப்பட்டுளளது.

யாழ்ப்பாண கோட்டத்திற்

(8ஆம பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. கலை முதற்தேர்வு – 2000
2. கலைமாணி – பகுதி I – 2000
3. கலைமாணி – பகுதி II – 2000
4. வணிக முதற்தேர்வு – 2000
5. வணிகமாணி – பகுதி I – 2000

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா 15/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெறவிரும்புவோர் நிதியாளர் யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 15/- க்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீள் தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31 - 12 - 2001 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**குறிப்பு:** மீள்பரீட்சார்த்திகள் உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.

*23-11-2001* பதிவாளர்

(கி-2919)


## 69 லொறிகளில் உணவுப்பொருள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

மீட்கப்படாத கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் பகுதிகளுக்கு கடந்த 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 69 லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் தேவையான பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

25 லொறிகள் கிளிநொச்சிக்கும், 28 லொறிகள் முல்லைத்தீவுக்கும், 16 லொறிகள் மன்னாருக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாகவும்.

இவற்றில் 27 லொறி உர வகைகள் அடங்கும் எனவும் ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## திருமறைக் கலாமன்ற தினம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி திருமறைக் கலாமன்ற தினம் கொண்டாடப்படவுள்ளது

இதனை ஒட்டி பல்வேறு கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மன்ற பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(உ-106)

உடற்

7ம் பக்கத் தொடர்ச்சி)

துழைப்பும் உதவியும் வேண்டப்படுகிறது. இதன் மூலம் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ள மக்களுக்கு ஒளி கொடுத்த புண்ணியம் பரோபகாரிகளையே சாரும். □


### யாழ் பிரதேச கலாசார பேரவை நடாத்தும்

# கலாமாலை 2001

தலைவர்: திரு. பா. செந்தில்நந்தனன்
(யாழ் பிரதேச கலாசார பேரவை தலைவரும் பிரதேச செயலரும்)

காலம்: நாளை 25.11.2001 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 1-30 மணி (புதிய நேரப்படி)

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம்

அனைவரையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

யாழ் பிரதேச
கலாசார பேரவை

(C-2913)

யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத
வைத்தீஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம்
(வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விஷு வருடம் கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி 26 11. 2001 திங்கட்கிழமை பகல் 1. 30 மணி 30 நிமிடமளவில் வரும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் மீன லக்கினமும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ மத்பாலாம்பிகாசமேத வைத்தீஸ்வர பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும், பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

அதற்கான பூர்வாங்க கிரியைகள் 25 11. 2001 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 35 மணியளவில் ஆரம்பமாகும்.

தர்மகர்த்தா
வை. கந்தப்பசெட்டியார்.

(3993)

# ஐக்கிய தேசிய கட்சி - யாழ்மாவட்டம்

## பொதுத் தேர்தல்-2001





**4** அன்பான வாக்காளப் பெருமக்களே! **8**

**தி. மகேஸ்வரன்** **எஸ். கனகசுந்தரம்**


ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் V. J. S யாழ் - கொழும்பு பஸ் சேவை தரைவழிப் பாதை ஊடாக நடைபெற்ற போது அந் நிறுவன முகாமையாளராகக் கடமையாற்றி தமிழ் மக்களின் இன்னல்களை தவிர்த்த நான் உங்கள் முன்னிலையில் வாக்குக் கேட்டு நிற்கின்றேன். கடந்த காலங்களில் எரிபொருள் மற்றும் உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் V. J. S இன் முகாமையாளர் என்ற வகையில், பல அமைச்சுக்களிடமும் சென்று இதற்குப் பரிகாரம் பெற்றுக் கொடுத்தேன்.

1996 இல் யாழ் குடாநாட்டின் சிவில் நிர்வாக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து யாழ் மக்களுக்கு போக்குவரத்தில் ஏற்பட்ட சிக்கல்களின் போது வலிவடக்கு மக்களுக்கு இலகுவான முறையில் பயண அனுமதியை பெற்றுக் கொடுத்தேன்.

**மக்கள் சேவை மகேசன் சேவை** எனச் செயற்பட்டேன்-

டிசம்பர் மாதம் 5-ந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உங்கள் வாக்குகளை அளித்து அதனை வெற்றி பெறச் செய்வதன் மூலம் இதுவரை தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்களுக்கு விடிவு ஏற்படுமென உறுதியுடன் வாக்காளப் பெரு மக்களுக்கு கூறி வைக்கின்றேன்.

சுபீட்சமான எதிர்காலத்திற்கு ஐக்கியதேசியக்கட்சிக்கே வாக்களியுங்கள்



X 4 ☒ 8 ☒

அன்புடன்

**எஸ்.கனகசுந்தரம்**
V.J.S சுந்தரம்-உடையார்

காங்கேசன்துறை தொகுதி

(கி-2922)

# நாட்டை அழிவின் விளிம்பிற்கு இட்டுச்செல்வது ஈ. பி. டி.பியே

## மகேஸ்வரன் உரை

[யாழ்ப்பாணம்]

ஐக்கிய தேசியக் கட்சி நீங்கள் நினைப்பது போல் சிங்களக்கட்சியல்ல அது ஓர் தேசிய ஜனநாயகக்கட்சி.

50 ஆண்டுகளின் பின்னர் கடந்த பொதுத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையேனும் பெற்றுக் கொண்டமையானது இதனை நன்கு புலப்படுத்துவதாக உள்ளது.


ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் சித்தன்கேணியில் நிகழ்ந்த தோதல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ;

இலங்கையிலுள்ள எந்த வொரு அரசியல் கட்சியும் சகல மாவட்டங்களிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றது கிடையாது ஆனால் அந்தச் சிறப்பு ஐக்கிய தேசியக்கட்சிக்கு உண்டு.

இது ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட கட்சி என்பதற்கு இதைவிட சான்றாதாரங்கள் தேவைப்படா.

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவ



தற்கு, கட்சியோ, சின்னமோ தடையில்லை.

எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள், எமது பிரச்சினையை அவையில் உரத்துக் கூறித் தீர்வுகாண்பார்கள் என்பதே முக்கியம்.

கடந்த மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட சந்திரிகாவின் ஆட்சிக்காலமே கொடுமை நிறைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்!

தவிர விடுதலைப் புலிகள் கடந்த 17 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனத்திற்கு ஆற்றிவரும் அர்ப்பணிப்புகள் தியாகங்களை! கொச்சைப் படுத்தி, தாமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என ஈ. பி. டி. பியினர் உண்மைக்குப் புறம்பாக உலகுக்குப் பறை சாற்றி வருகின்றனர்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சுமுகமாக இடம் பெறவிருந்த சமாதானப் பேச்சைக் குழப்பி நாட்டைத் தொடர்ந்தும் அழிவின் விளிம்பிற்கு இட்டுச் செல்பவர்களும் ஈ.பி டி.பி.யினரே.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழினத் துரோகக் கும்பல் என்பதற்கு நீலன் திருச்செல்வத்திற்கு விதிக்கப் பட்ட மரணதண்டனையைத் தவிர ஆதாரம் வேறு தேவையில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களை சுதந்திரமான சூழலில் நிம்மதியாக வாழ வைப்பது ஒன்றே எனது குறிக்கோள் இதற்காகவே ஐ. தே. க. வுடன் இணைந்து செயற்படுகிறேன்;

இந்த வகையில், மக்கள் அளித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களின் உயர்வு வேண்டி கடந்த ஒரு வருட காலத்தில் 23 தடவைகள் எனது குரல் பாராளுமன்றத்தில் ஓங்கி ஒலித்திருக்கிறது என்று குறிப்பிட்டார். (உ)

# கூட்டமைப்பின் குட்டு 4 மாதத்தில் வெளிப்படும்

## வரதர் வானொலியில் உரை

[கொழும்பு]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டுச் சேர்ந்து நிற்கும் கூட்டமைப்பினர் பெரும்பான்மை வாக்குகளால் அதிக ஆசனங்களைப் பெற்றாலும் அவர்கள் குறைந்தது 4 மாதம் கூட பாராளுமன்றில் கூட்டாக இருக்கமாட்டார்கள் என்று வடக்கு -கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

நேற்று தொலைபேசி மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் வானொலி நிகழ்ச்சி ஒன்றில்,

மற்றைய தமிழ்கட்சிகள் போல் நீங்களும் கூட்டாக இணைந்தால் தமிழர்களின் வாக்குகளை சிதறிவிடாது பாராளுமன்றில் அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கலாமே என்று கேட்கப்பட்ட கேள்விக்குபதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; தற்போது கூட்டுச்சேர்ந்துள்ள அமைப்புக்கள் மற்றும் குழுக்கள் ஏதோ ஒரு பின்னணியின் தாக்கத்தினாலேயே கூட்டுச் சேர்ந்துள்ளன.

எதிர்வரும் தேர்தலின் பின்னர் யார் ஆட்சிக்குவந்தாலும் அனைவரும் பாராளுமன்றை விட்டு வெளியேற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் ஒரு அறிவிப்பினை விடுத்தால் அப்பொழுது கூட்டமைப்பு பற்றி யார் வெளியேறுவது யார் அதிக பாதுகாப்புடன் கொழும்பில் இருப்பது என்பது பற்றியும் புரியும்.

இன்னும் நான்கு மாதத்திற்குத்தான் கூட்டமைப்பின் கூத்து என்று அவர் தெரிவித்தார். (உ-7)

**தேர்தல் வியூகம்**

# இலங்கை இரு நாடுகளாக பிளவுறுவதை அனுமதியோம்

## ஜே. வி. பி. எச்சரிக்கை

(திருமலை)

இலங்கை இரு நாடுகளாகத் துண்டாடப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம. தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட்டு அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். தமிழ மக்களுக்கு வழங்கப்படும் உரிமை, சுயாடசியின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும்.

திருமலை மணிக்கூட்டு வீதி முன்றலில் நடைபெற்ற ஜே. வி.பி. யின் பிரசாரக கூட்டமொன்றில் உரையாற்றிய முன்னாள் அம்பாந்தோட்டை எம். பி.யும் திருமலை மாவட்ட ஜே வி.பி வேட்பாளருமான அஞ்ஞான் உம்மா உரையாற்றும போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது;

இனப்பிரச்சினை பேச்சு வார்த்தை மூலமே தீர்க்கப் பட்டு தமிழ் மக்கள் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை வைத்து ஐக்கிய தேசிய கட்சியும தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பினரும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைபினரும் விடுதலைப் புலிகளை விடுத்து தங்கள் காலில் சுயமாக நின்று தேர்தலில் போட்டியிட முன்வர வேண்டும். என்று அஞ்ஞான் உம்மா கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலததில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி.பி) மீது அராஜகங்கள் கட்டவிழ்தது விடபபட்டன.

இன்றும் நாம் அவற்றுக் கெல்லாம் முகம் கொடுதது சவால்களை ஏற்று தலை நிமிர்ந்து நிற்கிறோம். இந் நிலையில நாம் ஸ்திரமான அரசியல்கட்சியாக மாறியுள்ளதுடன் அரசாங்கத்தை அமைக்கும் சக்தியாகவும் உருவெடுத்துள்ளோம் என்றும் அவர் கூறினார். (வ)

# இனவாதக் கட்சிகளை தோற்கடிக்க ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

## சிஹல உறுமய இவ்வாறு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனவாதக் கட்சிகளைத் தோற்கடிக்கும் முகமாக ஐரோப்பிய ஒன்றியம் தேசிய சமாதானப் பேரவைக்கு நிதியுதவி வழங்கி வருவதாக சிஹல உறுமய கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு கடந்த புதன் கடிதமொன்றை சிஹல உறுமய அனுப்பி வைததுள்ளது.

இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் விடயங்களில் வெளிநாட்டு அமைப்பொன்று தலையிடுவதுமுற்றிலும் தவறானது.

போருககு எதிரான நடவடிக்கை ஒன்றிற்காக தேசிய சமாதானப் பேரவைக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்க முடியாது என்றும் அககட்சி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தேசிய சமாதானப் பேரவைக்குநிதியுதவி வழங்கி வருவது எந்தவொரு அரசியற் கட்சிகள் தொடர்பிலோ அல்லது யுத்தம் தொடர்பிலோ அந்தவகையில் சம்பந்தப்படவில்லையென ஐரோப்பிய ஒன்றிய பேச்சாளரான லலித் மென்டிஸ் தெரிவித்துளளமைகுறிப்பிடத் தக்கது. (உ-5)

# ஆசிரியர்மீது வேட்பாளா அக்கறை

(கோப்பாய்)

அரசியல் கட்சி வேட்பாளர்களுடைய கவனம இப்போது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் பக்கம் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கபபடுகின்றது.

ஒரே கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு வேட்பாளரும் தமக்கே வாக்களிக்கும்படி துண்டுப் பிரசுரங்களை அனுப்பி வருகின்றனராம். இவர்களில் கூடுதலானோர் கல்வியைவிட ஆசிரியர் நலன் பேணுவதிலேயே மிக அக்கறையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-79)

# வாக்களிப்புநடந்தஇடத்திற்கு துப்பாக்கியுடன் சென்றவர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

தபால் மூலம வாக்களிப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இடத்திற்கு கைத் துப்பாக்கியுடன் சென்ற ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரை கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதிவான் நாமல் மல்ல பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

ஐ டி. எச் இல் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபையில் தபால் வாக்களிப்பு இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் ஐக்கிய தேசியக் கட்சி நகரசபை உறுப்பினரான ரெஜிவீரசிங்க என்பவர் தனது ஆதரவாளர்களுடன் சென்று கைத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டிப்பான நிபந்தனையின் பேரில் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி வாரத்தில் மூன்று நாட்கள் கொலன்னாவ பொலிஸ்நிலையத்தில் சமுகம் அளிக்க வேண்டும் எனவும் உத்தர விட்டுள்ளார். (உ-4)

# கொட்டும் மழையிலும் குடாநாட்டில் வாக்கு வேட்டை

(யாழ்ப்பாணம்)

கொட்டும் மழையிலும், கட்சிகள் தேர்தல பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

நான்கு தமிழ்க கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளரான மாவை சேனாதிராசா அடை மழையையும் பொருட்படுத்தாது தனது ஆதரவாளர்சகிதம் வீடுவீடாகச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டதுடன்,

ஏனைய கட்சிஉறுப்பினர்களும இவ்வாறே வாக்குவேட்டையில் ஈடுபட்டிருந்தனர். (உ-19)

# ஜோசப்பரராஜசிங்கம்சென்ற வாகனத்தை படையினர் சல்லடைபோட்டுத்தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும தற்போதைய தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளரும ஜோசப்பரராஜசிங்கம், பிரசார நடவடிக்கைக்காக ஆதரவாளர்களுடன் மண்டூருக்குச் சென்ற வாகனம் வீச்சட அதிரடிப் படையினரால் கடந்த புதன் கிழமை சல்லடை போட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது,

புலிகளின் பிரதேசத்திற்குள் பிரசார நடவடிக்கைக்காக அடிக்கடி செல்வதனாலேயே இச்சோதனை மேற் கொள்ளப்பட்டதாகவும், சாதாரண பொதுமகனை அச்சுறுத்துவதுபோல் தன்னை படையினர் அச்சுறுத்தியதாகவும் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-4)

### எதிர்வரும் தேர்தலில் பெரும்பான்மை

# ஆசனங்களை கைப்பற்றும் கட்சி ஜனாதிபதியின் கட்சியாக இருக்க வேண்டும்

## இதுவே 60 வீதமான மக்களின் விருப்பமாகும்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை கொண்ட கட்சியும் வெவ்வேறாக இருக்க வேண்டுமா அல்லது ஒரே கட்சியாக இருக்க வேண்டுமா என்றகேள்வியை மையமாக வைத்து நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் ஜனாதிபதியும் பாராளுமன்றத்தல் உள்ள அரசாங்ககட்சியும் ஒன்றாக இருக்க வேண்டுமென 60வீதமான மக்கள் தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர் என கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கருத்துக் கணிப்பை ''மார்க்சிமாட் ஒகனைசேஷன்'' என்னும்அமைப்பு நடத்தியிருந்தது.

''மார்க்சிமாட் ஒகனைசேஷன் அமைப்பின் கருத்துக் கணிப்பில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் ஆட்சி அதிகாரத்தில் உள்ள கட்சியும் வெவ்வேறாக இருக்கவேண்டும் என 29 வீதமான மக்களும்,

இதில் எதனையும் கூறமுடியாதவர்களாக 9 வீதமான மக்களும் இனம்காணப்பட்டுள்ளனர். (உ)

# செய்தித் துளிகள்

## போட்டிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

திட்டமிடல் செயற்பாட்டு அமைச்சினால் நடத்தப்படுகின்ற அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது திறமைகாண் போட்டிப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-5-19)

## வினைத் திறன்காண் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

நீதிமன்ற பதிவாளர் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை தரம் 2, தரம் 3, அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சை இன்று காலை 9.00மணிக்கு வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. (உ-5-19)

## தனியான வாக்குச் சாவடிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் முஸ்லிம் வாக்காளர்கள்தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக தென்பகுதியில் ஆறு மாவட்டங்களில் தனியான வாக்குச் சாவடிகள் அமைப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கொழும்பு, கம்பகா, களுத்துறை மாவட்டங்கள் உட்பட ஆறு மாவட்டங்களிலும் இருக்கின்ற இடம்பெயர்ந்த 26 ஆயிரம் மக்களுக்கு இவ்வாக்குச் சாவடிகள உதவியாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## போட்டிகள் பின்போடப் பட்டன

(சுண்டுக்குளி)

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்த யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் யாழ் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழக அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டிகள் காலநிலை காரணமாக மீண்டும் பிற் போடப்பட்டுள்ளன.

காலநிலை சீரடைந்ததும் போட்டிகள் நடைபெறும் என்று மேற்படி சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார் (எ-216)

## அபராதம் விதிப்பு

(மந்திகை

கரணவாய்ப் பகுதியில்சுகாதாரச் சீர்கேடான முறையில் வெதுப்பகம் நடத்திய நபர் ஒருவருக்கு பருத்தித்துறைநீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம்விதித்துள்ளது.

இப் பகுதியில் பருத்தித்துறைசுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சுகாதார பரிசோதகரினால் பலமுறை ஆலோசனை வழங்கப்பட்ட போதும், இந்நபர் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமையினாலேயே இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. (செ-23)

## வரவேற்பு நிகழ்வு

(பாஷையூர்)

யாழ்.பல்கலைக்கழக புது முகமுகாமைத்துவ வணிகபீட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை9மணிக்குயாழ் பல்கலைக்கழகத்தில் இடம் பெறவுள்ளது. (உ-242)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 16வது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது

தலைவராக சி குலசிங்கம் செயலாளராக ப.சிவச்சந்திரதேவன், பொருளாளராக செல்வி சி.விஜேதீபா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-2)

## ஆசிரிய மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம்வருடப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆசிரிய மாணவர்களை நாளை ஞாயிற்றுக் கிழமை இந்துக்கல்லூரி நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (உ)

## தீவிர சோதனை

(நீர்வேலி)

கோப்பாய் இராச வீதிப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக படையினர் திடீரென தீவிர சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோண்டாவில் பகுதியிலும் மோட்டார் சைக்கிளில் வரும் படையினர் அடிக்கடி சோதனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-289)

## நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்களின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறும் என்றும் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (உ-2

## பரீட்சைக்கான ஆயத்த வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

சைவப்புலவர் தேர்வுஎதிர்வரும் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20,21,22 திகதிகளிலும், சைவசித்தாந்த பண்டிதர்தேர்வு மேமாதம் முதல் வாரமும நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி தேர்வுகளுக்கான ஆயத்தவகுப்புக்கள வண்ணை நாவலர்வித்தியாலயத்தில்சனி ஞாயிறு தினங்களில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஆரிய திராவிடபாஷாபண்டிதவகுப்பு, சமஸ்கிருதவகுப்பு பண்ணிசை வகுப்பு ஆகியவும்நடத்தப்படடு வருவதாகவும்மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-9)

## பாலியல் வல்லுறவு இளைஞர் கைது

(கோப்பாய்;

எட்டுவயது நிரம்பிய பாடசாலை மாணவியை இரு இளைஞர்கள் பாலியல வல்லுறவுக்கு உள்ளாக்கிய சம்பவம் அண்மையில் உரும்பிராய்ப் பகுதியில் நடைபெற்றுள்ளது,

பாதிக்கப்பட்ட தரம் 1 இல் கற்கும் மேற்படி மாணவி சம்பவத்தை தனது பெற்றோரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்கள்சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர் பொலிஸார் இக்குற்றத்தைப் புரிந்த 18 வயது நிரம்பிய இரு இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். (எ-79)

# மாவட்டசுகாதாரதினமாக டிசெம்பர் 1 பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியை லயன்ஸ் கழகம் மாவட்ட சுகாதார தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

அன்றைய தினம் தொய்வு (ஆஸ்துமா) நோய் சம்பந்தமாகவும் அதைக் குணப்படுத்தும்வழிகள் தொடர்பாகவும்ஆராயும் ஆயுள்வேதகருத்தரங்கு ஒன்று மானிப்பாயில் நடைபெறவுள்ளது;

இக் கருத்தரங்கில் குடாநாட்டிலுள்ள பிரபல சித்த வைத்தியர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

சர்வதேச எயிட்ஸ் தினமும் அன்றே அனுட்டிக்கப்படவுள்ளது,

சிவா நறுமணப்பூங்காவின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகளை மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம், மற்றும் கோப்பாய், நல்லூர், சுன்னாகம், வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகங்கள் ஏற்பாடு செய்துள்ளதாக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B பிராந்தியம் 10 இன் தலைவர் லயன் எஸ் ஞானராஜா தெரிவித்தார்: (உ-106)

# சிகை அலங்கரிப்பு நிலையத்தில் இருந்தவர் துப்பாக்கி சூட்டுக்குப் பலி

(கொழும்பு)

தெகிவளையில் உள்ளசிகை அலங்கரிப்பு நிலையத்திற்குள் வைத்து இனம் தெரியாத நபர்களால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவரும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் தெகிவளைப் பகுதியில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையத்திற்குள் நுழைந்த இரண்டு இனந் தெரியாத நபர்கள் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் அதில் அங்கிருந்த ஒருவர் மரணமானதுடன், ஊழியர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை அங்கொடையில் நேற்று இரவு முன்தினம் இடம்பெற்ற மோதல் தொடர்பாக 10பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும ஐக்கியதேசியக் கட்சியினதும் ஆதரவாளர்கள் என்றுமலையம் பிட்டி பொலிஸ் அதிகாரிஜெயலகிஸ் தெரிவித்துள்ளார். (உ-7)

# பயணச் சீட்டுக்களை வடமராட்சியிலும் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிமக்களின் நலன் கருதி, வடபகுதிக்கு வெளியே பயணம் செய்வோரிற்கான பயணச்சீட்டுகள மீண்டும் நேற்றுமுதல் வடமராட்சியில் வைத்து வழங்கப்படுகிறது.

செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களில் சேவையில் ஈடுபடும்'சிற்றி ஒவ் றிங்கோ, கப்பலுக்கான பயணச்சீட்டுகள்திங்கள, புதன் ஆகிய இரு தினங்களும்நெல்லியடியில் உள நான் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக நான் இணைப்பாளர் அறிவித்துள்ளார், [உ-23]

# எடுத்துவர வழியின்றி 700 தபால்பொதிகள் திருமலையில்தேக்கம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம்காங்கேசன் துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக்கப்பலில் குடாநாட்டிற்கான வெளியூர் தபால் அடங்கிய 207 பொதிகள்எடுத்துவரப்பட்டுள்ளன.

அதே சமயம், இங்கு சேகரிக்கப்பட்ட 50 தபால் பொதிகள் இக் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகபிரதம தபால் அதிபர் சி மார்க்கண்டன் தெரிவித்தார்.

மேலும் திருமலையில் 700 ற்கும் மேற்பட்ட பொதிகள் இருப்பதாகவும் கப்பலில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி காரணமாகவேஇப்பொதிகள்எடுத்து வரப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# திருமுறை விழாவும் பரிசில் வழங்கலும்

(சுன்னாகம்)

உடுவில் கல்விக் கோட்ட சைவ நெறிக் குழுவின் வருடாந்த சைவத் திருமுறை விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.00மணிக்கு ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ''கடல் கடந்த நாடுகளில் சைவ நெறி'' என்னும் தலைப்பில் ஓய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு, ஸ்கந்த வரோதயாக்கல்லூரிஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர்களும ''வாகீசர் திருப்பாஇசையும் வாசகர் திருப்பாஇசையும்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் நா.வி.மு நவரெத்தினம் ஆகியோர்களின் சிறப்புரைகளும,

மேற்படி கோட்டப்பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற திருமுறைப்பண்ணிசை, நீதிச் செய்யுள மனனம், தொண்டுபடு செயன்முறை, புராணபடனம், கதாப்பிரசங்கம் ஆகியபோட்டிகளில் வெற்றி பெற்றமாணவர்களுக்கு பரிசில்வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (செ-207-49)

# குடாநாட்டிலுள்ள அங்கவீனர்களுக்கு நேரில்சென்று இலவச உதவிபுரியும் ஜேர்மனியர்

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனி நாட்டின் சமூகத் தொண்டரான ஹெயின்ஸ் பீற்றர் டென்றலர் தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று அங்கவீனர்கள் பயன்படுத்தும் முச்சக்கரவண்டி, ஊன்றுகோல மற்றும் இதர பொருட்களை பாதிக்கப்பட்டோரிடம் நேரில்சென்று இலவசமாக கையளித்து வருகிறார்.

கடந்த 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு தனது முதலாவது விஜயத்தை மேற்கொண்ட இவர், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை, அன்னை தெரேசா இல்லம், உடுவில் ஆர்க் இல்லம், கொழும்புத்துறை சென் ஜேம்ஸ் முதியோர் இல்லம் ஆகியவற்றுக்கும் நேரில் சென்று முதியோர் மற்றும் அங்கவீனர்களுடன் கலந்துரையாடியதுடன் உபகரணங்களையும் வழங்கியுள்ளார்.

இவரின் சேவைக்கு ஜி ரி. சற் நிறுவனம் ஒத்துழைப்பை நல்கி வருவதுடன், அங்கவீனர்களை சமூகத்தில் இனங்கண்டு தெரியப்படுத்துவதில் பிராந்தியம் 10 லயன்ஸ் கழகங்கள் இவருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இதற்குமுன்னர் ஜி ரி. சற் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இவர் உதவிபொருட்களை யாழ். மக்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பலதரப்பினரையும் சந்தித்துவரும் இவர் இணுவிலில் இயங்கும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலைக்கும் நேரில் சென்று உற்பத்தி தொடர்பான செய்முறை விளக்கங்களைப் பார்வையிட்டார். (உ-106)

# தொடரும் மழையினால் முகாம்களில் வசிப்போரின் அடிப்படைவசதிகள்பாதிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை கடற்கரையோரத்தை அண்டிய முகாம்களில், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளதுடன், மலசலகூடக் குழிகள மற்றும் கிணறுகளும் நிரம்பியுள்ளன;

தும்பளை லூர்துமாதா கோவில் முகாம, அந்தோனியார் கோவில் முகாம்.மற்றும் துன்னாலைப்பகுதியில் அமைந்துள்ள முகாம்களில் இந்நிலை காணப்படுகிறது.

அடிப்படைவசதிகள் பாதிப்புற்ற நிலையில் இம் முகாம்களில் தொற்று நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டிருப்பதாக சுகாதாரக்கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-23-245)

# மீன் விற்பனை நிலையம் அமைப்பு

பருத்தித்துறைமுனைப்பகுதியில் ஐந்து இலட்சம் ரூபா செலவில், மொத்த மீன் விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது;

இதற்கான நிதி வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்டது; (செ-23)

# படையினர் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழல் படையினரின்தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

விடாது மழைபெய்த நிலையிலும் படையினர் அப்பகுதியில் நின்ற இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் பரிசோதித்தனர். (உ-19,9)

## இன்று ஒரு தகவல்

# மோசமான மனைவி

குரு கோரக்கநாதரின் அருட்செயல்களைப் பற்றிக் கேள்விப்பட்டார் ஒரு அடியவர். எப்படியும் அவரைக் கண்டு அருளுரைகளைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தில் பலநாட்கள் பயணம் செய்து பஞ்சாபை அடைந்தார். எப்படியோ விசாரித்துக் கோரக்கநாதரின் இல்லத்தை அடைந்தார். அப்பொழுது கோரக்கர் அங்கு இல்லை. அவர் மனைவி மட்டுமே வீட்டில் இருந்தாள். பணிவு என்பதையே அறியாத எல்லோரையும் எடுத்தெறிந்து பேசக் கூடிய அந்தப் பெண்மணி வந்த அடியாரைப் பார்த்தாள்;

''வேலை வெட்டி தெரியாத அந்த ஆளைத் தேடி ஏன்தான் இப்படிப் பல பேர் வருகின்றார்களோ தெரியவில்லை, ஒன்றுக்கும்உதவாத ஆள் அவர். உங்களையெல்லாம் ஏமாற்றுகிறார். நீங்களும் அவர்காலில் விழுகின்றீர்கள். எந்நேரமும் பைத்தியம் பிடித்தது போல ஏதாவது உளறிக் கொண்டிருப்பார். 'மனைவியையே சரியாக் கவனிக்காதவர் அவர்'' என்று பொரிந்து தள்ளினாள் அவள்;

''அம்மா! குடிப்பதற்குத் தண்ணீர் தாருங்கள்'' என்று கேட்டார் அடியவர். ''என் கணவரைத் தேடி வருபவர்களுக்கு எந்த உதவியும் செய்யமாட்டேன். அவரை வேலை வெட்டி இல்லாத சோம்பேறி ஆக்குவதே நீங்கள் தான்'' என்று கத்தினாள் அந்தப் பெணமணி. ''அமமா! குருநாதர் எங்கு சென்றிருக்கிறார் அதையாவது சொல்லுங்கள்!'' என்று கேட்டார் அடியவர். ''வீட்டில் அடுப்பெரிக்க விறகே இல்லை, விறகு கொண்டுவரக் காட்டிற்குப் போயிருக்கிறார். தலை நிறைய விறகு கொண்டுவரவில்லையானால் அவருக்கு இன்று சாப்பாடே கிடையாது'' என் றாள் அவள.

குருநாதரைக் காணக் காட்டிற்குச் சென்றார் அடியவர். அவர் எதிரே ஒருவர் தலையில் பெரிய விறகுக் கட்டுடன் வந்தார். அவர் கழுத்தில் கொடிய பாம்பு சுற்றிக் கொண்டிருந்தது. நாய்க்குட்டி போலச் சிங்கம் ஒன்று அவர் பக்கத்தில் வந்து கொண்டிருந்தது. நான் தேடி வந்த கோரக்கர் இவர்தான் என்று நினைத்த அடியவர் அவர் கால்களில் விழுந்தார். துறவியாரே! உங்கள் அருள் பெறுவதற்காக நீண்ட தொலைவிலிருந்து வருகின்றேன். விறகுக்கட்டை என்னிடம் தாருங்கள், நான் சுமந்து வருகிறேன்'' என்றார்.

''வேண்டாம் என் மனைவி மட்டும் நீ சுமந்து வருவதைப் பார்த்துவிட்டால் போதும், நான் மீண்டும் இரண்டுமுறை காட்டிற்கு வந்து இதே அளவு விறகு வெட்டவேண்டும். இரண்டு நாட்களுக்கு எனக்குச் சாப்பாடு வேறு கிடைக்காது'' என்றார் கோரக்கர். ''நீங்களோ பெருந் துறவி. இந்த உலகமே உங்களைப் போற்றுகிறது நீங்கள் சொன்னால் சிங்கம் பணிகிறது பாம்புகள் மாலைகளாகின்றன. ஆனால் உங்கள் மனைவி எவ்வளவு கொடுமை செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்கிறீர்கள். என்னால் அதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று கேட்டார் அடியவர்.

அடியவனே! எவனிடம் அன்பு இருக்கிறதோ அவனிடம் பொறுமையும் இருக்கும் அவனால் சிங்கத்தையும், பாம்பையும் தன் ஆணைக்குக் கீழ்ப்படிய வைக்க முடியும் மோசமான மனைவிகூட அவனுக்கு உதவிதான் செய்கின்றாள. அவள் அதிகமாகக் கோபப்படும்போதெல்லாம் அவன் அதிகப் பொறுமையைக் கற்றுக்கொள்கிறான். என் மனைவியும் அவளுக்கு நான் முழுமையும் கட்டுபட்டு நடககிறேன் என்பதை ஒருநாள உணர்வாள, அதன் பிறகு என்னிடம் அதிகம் கோபம் கொள்ள மாட்டாள்'' என்றார் கோரக்கர். இதைக் கேட்டதும கோரக்கரின் கால்களில் விழுந்த அடியவர், 'என் பயணத்தின் நோக்கம்நிறைவேறிவிட்டது உங்கள் வாழ்க்கையைக் கொண்டு அன்பு என்றால் என்ன என்று புரிந்து கொண்டேன்'' என்றார். □

பேராசிரியர் எ. சோதி

## யாழ். பல்கலைக்கழக

# கலைப்பீட மாணவர்கள் ஒரு வாரமாக பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் கலைபபீட மாணவர்கள் அனைவரும் கடந்த ஒரு வார காலமாக வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றனர். கடந்த புதன்கிழமை தீபாவளி தினததன்று பல்கலைக்கழகத்தில் நடந்த இசை நிகழ்ச்சியின் போது முகாமைத்துவ பீட மாணவர்களால் கலைபபீட மாணவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்தே இப்பிரச்சினை எழுந்துளளது. தமது தரப்பு மாணவன் தாக்கப்பட்டதற்கு முறையான நடவடிக்கை எடுக்கபபட வேண்டும என்று கோரியே கலைப்பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. (ந-2)

## அரச அச்சகப் பாதுகாப்பு

# பொலிஸார் 55 பேர் திருப்பிஅழைக்கப்பட்டனர்

[கொழும்பு]

வாக்குச் சீட்டு உடபடதேர்தலுக்கு தேவையான ஆவணங்களை அச்சடிக்கும் அரச அச்சகத்தில் பாதுகாப்புக் கடமையிலிருந்த 55பொலிஸ் உத்தியோகஸ்தர் முன் அறிவித்தல் எதுவுமின்றி திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்,

வாக்குச் சீட்டுக்கள் அச்சாகிக் கொண்டிருக்கும் இந் நேரத்தில் அங்கிருந்த பொலிஸாரை திருப்பி அழைத்துள்ளமை வாக்குச் சீடடுகளில் தில்லு முல்லுகள் மோசடிகள் இடம் பெறுவதற்காக இருக்கலாமென்ற சந்தேகத்தை ஏற்படுததியுள்ளதென்று ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளர், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிற்கு முறையிட்டுளளார்;

கொழும்பு மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளா பாரதலக்ஸ்மன்பிறேமச்சந்திர அரச அச்சகத்துக்கு கடந்த செவ்வாய்க் கிழமை சென்று பார்வையிட்டதை அடுத்து கடமையில் இருந்த பொலிஸார் திருப்பி அழைக்கப்பட்டனரென்று ஐ.தே.கட்சிச் செயலாளர் யேலும் சுட்டிக் காட்டியுள்ளார். [இ]

## தேர்தலில் தவறாது வாக்களித்து

# தேசிய ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் தமிழர்பலத்தை வெளிப்படுத்துங்கள்

## துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இன்றுள்ள தேர்தல்முறை சிறுபான்மையினரைப் பொறுத்தவரை, சிறப்பானது ஏனெனில் குறைந்தவாக்குகளைப் பெற்றாலும் விகிதாசாரப் பிரதிநிதிதுவம் மூலம் வேட்பாளர்கள் பாராளுமன்றம்செல்லும் தகுதியைப் பெறுகிறார்கள்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ''தேர்தல் முறைமையும 12 ஆவதுநாடாளுமன்றத் தேர்தலும்'' என்ற கருப்பொருளிலான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

வாக்களிப்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். எனவே வாக்காளர்கள் தமது வாக்கைக் கட்சியின் சின்னத்திற்கு இட்டுப் பெறுமானப் படுததவேண்டும். பின்னர் தாம் அதிகம் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்திற்கு விருப்புவாக்கை அளிக்கலாம்;

மற்றைய இரண்டு விருப்பு வாக்குகள் முதல்தெரிவின் வெற்றியைப் பாதிக்குமாயின் அவற்றை புள்ளடியிடாது தவிர்க்கலாம். அல்லது எல்லா வேட்பாளர்களையும் சம தரத்தில் நோக்கி கடசியையே முதன்மையாகக் கணிததால் விருப்பு வாக்குகளைப் பிரயோகிக்கத் தேவையில்லை,

ஆனால், தேர்தலில் வாக்களிபபு மிகவும் முக்கியமானது. ஏனெனில் கட்சிகள் பெற்ற வாக்குகள் தேர்தல் மாவட்டத்திலும் தேசிய ரீதியிலும் கணககிடப்படுகிறது. தேர்தலில் குறைந்த பங்களிபபு கொண்ட மாவட்டத்திற்கு தேசிய பிரதி நிதித்துவம கிடைக்கும் வாய்ப்பு அரிதாகின்றது எனவே மக்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தவேண்டும்.

இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் ஆகக் குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்ட அதாவது 4 அங்கத்தவர்களை தெரிவு செய்யும் மாவட்டமாக திருகோணமலையும் ஆகக் கூடுதல் பிரதிநிதிகளைக் கொண்ட அதாவது 21 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் படும் மாவட்டமாக கொழும்பும் உள்ளன;

1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி 196 உறுப்பினர்கள் மக்கள் தெரிவின் மூலமே 29 தேசியப் பட்டியல் மூலமும் பாராளுமன்றம் செல்லும் தகுதியைப் பெற்றுள்ளார்கள். இலங்கையில் மொத்த வாக்காளர் தொகை 11 மில்லியன் 779 ஆயிரத்து 242 ஆகும்;

எனவே, தேர்தலில் மக்கள் வாக்களிப்பதன் மூலம் மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் தமக்குள்ள பலத்தை வெளிக்காட்ட முடியும் என்றார், (உ-106)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரண தரத்திற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் பாடத்திற்கான செயலமர்வு இன்று காலை 9மணி தொடக்கம் பி.ப. 1 மணிவரை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில்இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்குகொள்ளும் ஆசிரியர்களை பாடத்திட்டம் மற்றும் கைநூல், பாடநூல், எழுது பொருடகள் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-9)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சிச் செயற்றிட்டத்தின் மூன்றாவது நிகழ்ச்சித் திட்டமான, பாடசாலை மட்டக் கல்வி அபிவிருத்திக்கான எச்.பி ஒ வளஆளணியினருக்கான பயிற்சிச் செயலமர்வு, எதிர்வரும் 2, 8, 9, 10, 11ஆம்திகதிகளில் காலை 9.00மணிமுதல் மாலை5 00மணிவரை யழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில்இடம் பெறவுளளது. (உ-9)

## 'இலக்கிய அமுதம்' நூல் வெளியீட்டுவிழா

(யாழ்பபாணம)

மட்டுவிலைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் நா நலலதமபி எழுதிய ''இலககிய அமுதம்'' எனனும் நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு நலலூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமணடபத்தில் நடைபெறவுளளது.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரையையும, சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் இ. கைலைநாதன் வாழ்த்துரையையும், ஆசிரியமணி அ. பஞ்சாடசரம் வெளியீட்டுரையையும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் பண்டிதர் செ. திருநாவுக்கரசு நூல் ஆய்வுரையையும் வழங்கவுளளனர்.

(செ)

## பொதுக்கூட்டம்

(யாழ்பபாணம்)

தபால் தந்தி நலன்புரிக் கழகத்தின் 76 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு இலக்கம் 27 பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1இல் அமைந்துள்ள சோனக இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெறவுளளது, (உ-106)

★ ★ ★

(யாழ்பபாணம்)

யாழ்ப்பாணம கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமு.ப. 10.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுளளது.

சங்க அனுமதி இன்றி, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்குமத்தியஸ்தர்களாகக்கடமையாற்றியதமது சங்க அங்கத்தவர்களின்நிலை பற்றி ஆராயப்படவுள்ள இக் கூட்டத்திற்கு உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு செயலாளர் சு. சிறிகாந்தன் கேட்டுள்ளார், (உ-106)

# பண்டேஜிற்கு தட்டுப்பாடு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பண்டேஜிற்கு பெரும் தட்டுபபாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் வெளிநோயாளர் பிரிவில் காயங்களுக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்களை துணி கொண்டு வருமாறு பணிக்கப் படுகின்றது. (செ-23)

## இடைநிறுத்தப்பட்ட

# பகுதிநேர விரிவுரையாளர் விபரங்களை பதியலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த காலங்களில் பகுதிநேர விரிவுரையாளர்களாக கடமையாற்றி பின்னர் இடை நிறுத்தப்பட்டவர்கள் தமது விபரங்களை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் நாளைஞாயிற்றுக்கிழமை பதியுமாறு சங்க வட்டாரங்கள் கேட்டுள்ளன.

இம்முறை போதனாசிரியர் தோவு நியாயமான முறையில் இடம்பெறும் என்றும், இது தொடர்பான உறுதியை தொழிற்பயிற்சி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தமக்கு அளித்ததாகவும வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் இடை நிறுத்தப்பட்ட போதனாசிரியர்கள் சார்பாக சங்கத்தினால் பிராந்திய பணிப்பாளருக்கு அனுப்பபபட்ட பல கடிதங்கள் அவருக்கு கிடைக்கவில்லை என்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க முடியாது போய்விட்டதாகவும் சங்கவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-2)

## சிந்தனைக்கு விருந்து

### கற்பில்லா மாந்தர்

வண்டுபூ மீதமர்ந்து மாந்துந்தேன் சிற்றெறும்போ
அண்டியதில் ஊர்ந்தாலும் ஆவதென்ன? கண்டபடி
கட்சிபல மாறுகின்ற கற்பிலா மாந்தர்
பட்சிப்ப (து) என்னோ? பகர்.

பட்சிப்பது - உண்பது (அநுபவிப்பது)

'பழையவன்'

## விளையாட்டு செய்திகள்

# முத்தையா முரளிதரனின் இலட்சியம் என்ன?

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் 600 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே தனது தற்போதைய இலட்சியமாக உள்ளதாக உலகின் முதற்தர சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தனது 29 வது வயதில் 356 விக்கெட்டுக்களை இது வரை இவர்வீழ்த்திஉள்ளமை தெரிந்ததே,

இன்னும் பல வருடங்கள் விளையாட முரளிக்கு சந்தர்ப்பம் உள்ளதால் 600 விக்கெட்டுக்கள் வீழ்த்தும் கனவு நனவாகும் சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது

இதேவேளை, குறைந்த டெஸ்ட் போட்டிகளில் விளையாடி முரளி அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உள்ளார். இது வரை மேற்கு இந்திய தீவுகள் அணி வீரரான வோல்ஸ் பெற்ற 519 விக்கெட்டுக்களே உலக சாதனையாக உள்ளமைகுறிப்பிடத்தக்கது. (உ-2)

# அமெரிக்கா நோக்கி படகில் சென்ற கியூபா நாட்டவர் 30பேர் நீரில் மூழ்கி மரணமாகினர்!

[இலண்டன்]

அமெரிக்காவை நோக்கி கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த கியூபா நாட்டைச் சேர்ந்த30 பேர்காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் என்றும் ஒவ்வொரு வரும் 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வீதம் செலுத்தி சட்ட விரோதமாக அமெரிக்காவிற்குள் நுழையும் நோக்கில் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

30 அடி நீளமான படகில் 30 பேர் சென்றது மிகவும் ஆபத்தான தென்றும்தற்போது படகுமட்டுமே கடலில் மிதப்பதாகவும் அதில்பயணம் செய்த அனைவரும் கடலில் மூழ்கி இறந்திருக்கலாமெனவும அமெரிக்க கடற்படையினர் தெரிவித்துள்ளனர். [உ-5]

# இந்திய அணி வீரர்களுக்கு தண்டனை வழங்கியவர் பதவி விலக்கப்பட்டார்

(புதுடில்லி)

இந்திய அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆட்ட நடுவராக மைக் டென்னிஸ் இருப்பதை தென்னாபிரிக்க ஐக்கிய கிரிக்கெட் சபை நீக்கிவிட்டது.

இந்திய வீரர்கள் ஆறு பேரிற்கு எதிராக குறறச்சாட்டுக்களையும் தண்டனைகளையும் மைக் டென்னிஸ் அறிவித்ததைத் தொடர்ந்து இந்திய தரபபில் மிகுந்த கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் ஆட்ட நடுவரை மாற்ற வேண்டும என்ற கோரிக்கையை ஏற்று தென்னாபிரிக்க ஐக்கிய கிரிக்கெட் சபை இம்முடிவை எடுத்துள்ளது.

எனினும், இம்முடிவைத் தாம் எதிர்ப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை கூறி உள்ளதுடன் ஆட்ட நடுவரை நீக்கியதற்கும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது;

இதேவேளை, டென்னிஸினால் அறிவிக்கப்பட்ட முடிவுகள் மாற்ற முடியாதது என்றும் ஐ.சி.சி. கூறி உளளது.

இந்திய வீரர்களுக்கு எதிராக தண்டனை அறிவிக்கப்பட்டமை உலகளாவிய ரீதியிலும். இந்திய தரப்பிலும் மிகுந்த சர்ச்சையைஏற்படுத்தி உளளமையும் குறிப்பிடத் தக்கது.

இந்திய வீரர்கள் தண்டனைக்குஉட்படுத்தப்பட்டதை கண்டித்து இந்திய நாடாளுமன்றில் கண்டனம் தெரிவிக்கபபட்டதுடன், இதைவிட இந்திய அணியை திருப்பி அழைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைகப் பட்டுளளன. (உ-2)

## கூடைப்பந்தாட்ட போட்டியில் இன்று

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் கழகங்கள் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் கூடைப் பந்தாட்டப் போட்டியில் இன்று காலை 7.30 மணிக்கு யாழ்வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில மோத உள்ள அணிகளின விபரம வருமாறு

### பெண்கள் பிரிவு

கிறாஸ்கொப்பர் வி.க. அணி எதிர் பற்றீயன் வி.க அணி.

### ஆண்கள் பிரிவு

பட்டர்பிளை வி.க அணி எதிர் யாழ்ப்பாணம் புல்ஸ் அணி. (உ-2)

## கிரி. போட்டி ரத்து

இந்தியா மற்றும பாகிஸ்தான அணிகளின் பங்களிபபுடன் பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் பங்களாதேஷில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முக்கோண ஒரு நாள் கிரிக்கட் போட்டித்தொடர் ரத்துச் செய்யபபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## எரிபொருள்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் இடை இடையே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகிக்கப் படுகிறது

இவ்விநியோகம் பெரும்பாலும் அரச வாகனங்களுக்கும் மற்றும் அரச ஊழியர்களுக்கும் மேற்கொள்ளப்படுவதுடன் இடைஇடையே நூறு ரூபாவுககு அளவான பெற்றோல் அப்பாவிப் பொது மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

### கூடுதல் விலையில்

தலைநகர் யாழ்ப்பாணத்தில்ஒருதனிநபர் எரிபொருள் விற்பனை நிலையமும். கூட்டுறவு சார்ந்த 'மாக் F பெட்' எரிபொருள் விற்பனை நிலையமும் இருந்த போதும்அவை மூடப்பட்டுள்ளன.இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் பெற்றோல் 130 ரூபாவாகவும் (53 ரூபா கூடுதலாகவும்) மண்ணெணெய் 40 ரூபாவாகவும் (18 ரூபாவுக்கு மேல் கூடுதலாகவும்) விலை கொடுத்துவாங்கவேண்டியுள்ளது.

இந்த அதிகரித்த விலை அரச உயர் அதிகாரிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் தெரிந்திருந்தும் எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஏதும் அறியாத அப்பாவி மக்களின் தலையில் இந்த விலைச் சுமை ஏற்றப்பட்டிருப்பது தேர்தல் அலங்காரத் திருவிழாவின் உபயகாரர்களுக்குத தெரியாமல் இருப்பது விந்தையிலும் விந்தையாகவுள்ளது,

### மின்வெட்டுத்திறன்

மின்சாரம் வழங்கும் கூல் எயாருக்கு மூன்று லட்சம் ஒட்டோ டீசல் வந்த பின்னும்,நல்ல நாள் என்றும் பாராமல் பாவனையாளர்களின் அத்தியாவசியபாவனை நேரங்களினை அறிந்திருந்தும மின்சார சபையும் தனது 'மின் வெட்டுத் திறனை'க் காட்டிக் கொண்டிருக்கிறது.

## இராசி பலன்

24.11.2001

(கார்த்திகை 9 சனி)

நவமி மு.இ 8 32வரை

சதயம் மு.ப 8.02வரை

ராகுகாலம் 9.11-10.41

சுபநேரம் 3.11-4.41

சித்தம்

**மேடம்**

சென்றஇடத்தில் செல்வாக்கு,தொழில் சிந்தை,உறவினர்சந்திப்பு, காரியஅனுகூலம்

**இடபம்**

சுபநிகழ்வு,தூரதேசச் செய்தி,தொழில்முன்னேற்றம் காரியம் கைகூடும்

**மிதுனம்**

வயிற்றுக் கோளாறு, புதிய திட்டமிடல்,மனச்சஞ்சலம், முயற்சிதாமாதம்

**கடகம்**

எதிர்பாராத பிரச்சினை, முயற்சிதடங்கல், தொழில் மந்தம உடல்நலக்குறைவு

**சிங்கம்**

காரியஅனுகூலம்,நல்லவரவேற்பு திடீர்பயணம்,தனலாபம்

**கன்னி**

தொழில் மேன்மை,தேகஆரோக்கியம், காரியநன்மை மனமகிழ்ச்சி

**துலாம்**

வியாபாரமுன்னேற்றம்.பிரயாணதாமதம்,இனசனவருகை,பதட்டம்

**விருச்சிகம்**

அதிகாரிகள் மனஸ்தாபம், உடல்சோர்வு, காரியதாமதம் வியாதி

**தனுசு**

குடும்பசுகம்,காரிய அனுகூலம், கூட்டுமுயற்சி,அன்னியர்சந்திப்பு

**மகரம்**

மாதர் நட்பு, தொழில்நன்மை,கௌரவக்குறைவு,பணச் செலவு

**கும்பம்**

நண்பர்கள்உதவி, ஜனவசியம்,காரியம்கைகூடும்,சயனசுகம்

**மீனம்**

அமைதிக்குறைவு,காரியதாமதம்,புதிய திருப்பம்,சயனசுகக்குறைவு

(பழையநேரப்படி கணிக்கப் பட்டது) வளவன்


## பரிசளிப்பு விழா

இடம்: நல்லூர் இளம் கலைஞர் மண்டபம்
காலம்: இன்று (24.11.2001) சனிக்கிழமை பி.ப.1.00 மணி
தலைமை: திரு.செ. செல்வரட்ணம் (செயலாளர் நல்லூர் பிரதேசசபை)
பிரதம விருந்தினர்: திரு. ம. சிவானந்தா முகாமையாளர் தேசியசேமிப்பு வங்கி- யாழ்ப்பாணம்
பரிசு பெறுவோர்: நல்லூர் கோட்ட பாடசாலைகளில் இவ்வாண்டு நடைபெற்ற 5ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 200 மாணவர்கள், எமது சபையால் நடாத்தப்பட்ட குழு விளையாட்டுகள், சைக்கிள் ஓட்டம மரதன்ஓட்டப் போட்டிகளில் வெற்றிபெற்றோர்.
குறிப்பு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் இரவு 7.00 மணிக்கு இன்னிசை இரவுகள் கலை நிகழ்வுகள் இடம் பெறும்.
(சி-2918)



## பொதுத் தேர்தல்-2001



தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட
எங்கள் கூட்டுறவாளன்
திரு. சி. சிவமகாராசா
அவர்களுக்கே எம் வாக்கு



தமிழர் விடுதலைக் கூட்டணி
(சி-2898)

இதனைஇதனால் இவன்முடிக்
கும்என்றாய்ந்(து)
அதனை அவன் கண் விடல்

குறள்

===============

# வலம்புரி

===============

## கடைந்தெடுத்த உண்மை

பொதுஜனஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சியைக்கைப் பற்றுவதற்காக தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர். இதற்கு தமிழ்க் கட்சிகளும் பகடைக்காய்களாக பயன்படுத் தப்படுகின்றன. இவ்வாறு மல்வத்த பீடாதிபதி விபக்ஸிசார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுஜனஐக்கிய முன்னணியின் அமைச்சர்கள் பீடாதிபதியை சந்தித்த போது கூறப்பட்ட இவ் உண்மைக் கருத்து ஒரு பௌத்த பீடாதிபதியின் வாயால் வெளிவந்திருப்பது, வசிட்டனின் வாயால் பிரம்மஸ்ரீபட்டம் பெற்றதற்கு சமமானதாகும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தடைக்கல்லாகவும், யுத்தத்திற்கு ஆசி வழங்குபவர்களாகவும் பௌத்தபிக்குகள் இருக்கும் போது, வயதாலும் அனுபவத்தாலும், முதிர்வுற்றிருக்கும் மல்வத்த பீடாதிபதி கடைந்தெடுத்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆட்சியைக கைப்பற்றுவதற்காக கடந்த பல வருடங்களாகத் தமிழ் மக்கள் சிங்களப் பேரின வாதக் கட்சிகளால், ஏமாற்றப் பட்டுவருகின்ற உண்மை உலகறிந்த ஒன்றாக இருந்தபோதிலும், அந்த உண்மை மலவத்தபீடாதிபதியின் வாயால் வெளிவருகின்ற போது அதற்கு இருக்கின்ற கனதி-காத்திரம் உயர்வானதே.

கலாகாலமாக தமிழ் மக்கள் படுகின்ற துன்பங்களுக்கு, ஐககிய தேசியக் கட்சியும், பொது ஜன ஐக்கிய முன்னணியுமே காரணம்என்ற உண்மையை தொடர்ந்தும் மறைக்க முடியாமல், மல்வத்த பீடாதிபதி வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

இதில் வேதனை என்னவெனில் இருபெரும் கட்சிகளும் தமிழ்மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்ற உண்மையை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ள முடியாமல் போனமைதயாகும்.

பாராளுமன்றம்சென்று எதனையும் சாதிக்க முடியாமல் போன தமிழ் எம்.பி.க்கள், ஒவ்வொரு தேர்தலிலும் முன்வைக்கின்ற வாக்குறுதிகளைப் பார்க்கின்ற போது, தமிழ்மக்களை அவர்கள் படு முட்டாள்களாகவே கருதுகின்றனர் என்பது புலனாகின்றது.

# உடற் பாகங்களை இழந்தவர்களுக்கு உதவ
# அவயவங்களை உருவாக்கிவரும் ஜெய்ப்பூர்

[யாழ்ப்பாணம்]

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிகழ்ச்சித் திட்டத்தின் கண்காட்சி ஒன்று 20 ஆம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் இணுவில் மைக்லோட் வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட உபகரணங்கள் பலவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. உடலில் பாகங்களை இழந்த மக்களுக்குப் பொருத்துவதற்குரிய செயற்கை அவயவங்களைத் தற்போது பொலிபு றொபலீன் தொழில் நுட்பத்தால்உற்பத்தி செய்துவரும் ஜெய்ப்பூர் நிறுவனம் நவீன முறைமூலம் வடிவமைக்கப்பட்ட மூன்று சில்லுவண்டிகள்பாதிக்கப்பட்டவர்கள் பயிற்சிபெற உதவும் பொறிவகைகள் மற்றும் செயற்கை கைகள், கால்கள் வெள்ளைப் பிரம்பு, பாதணிகள் போன்ற இதர பொருட்களையும் நுட்பமான முறையிலும் பயன்படுத்தும்நோயாளருக்குச் சௌகரியமான இயற்கையை ஒத்த உணர்வுகள் ஏற்படக் கூடியவாறும் வழங்குவதில் முன்னிற்கிறது.

### பயன்பெற்றோர் விபரம்

ஜெய்ப்பூர் செயற்கை அவயவங்களின் மூலம் பயன்பெற்றவர்கள் சுயதொழில் முயற்சிகளிலும் கலை நிகழ்வுகள் மற்றும விளையாட்டுப போட்டிகளிலும் பங்குபற்றும் புகைப் படங்களும் காட்சியில் இருந்தன.

1987 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரையான காலபபகுதியில் செயற்கை அவயவங்களைப் பொருத்திக் கொண்டோர் விபரம் வருமாறு.

| | அலுமினியம் | பொலிபுறொப்பலீன் |
|---|---|---|
| முழங்காலுக்கு மேல் | 433 | 18 |
| முழங்காலுக்கு கீழ் | 1793 | 111 |
| இரண்டு கால்கள் | 33 | 02 |
| மொத்தம் | 2259 | 131 |

இவர்களில் ஆண்கள் 1803 பேர் அலுமினியம் மூலமும் 109 பேர் பொலிப்பு றொப்பலீன் மூலமும் பெண்கள் 423 பேர் அலுமினியம் மூலமும்20 பேர் பொலிபு றொப்பலன் மூலமும் செயற்கைக் கால்களைப் பெற்றுள்ளனர்.

வயதுப் பிரிவின் அடிப்படையில் 11 வயதுக்கும் 20வயதுக்கும் இடைப்பட்டோரில் 657 பேர் செயற்கைக் கால்களைப் பெற்றுள்ளனர். 21- 30 வயதுப் பிரிவினரில் 644 பேர் செயற்கைக் கால்களைப்பெற்றுள்ளனர். இந்த வயதுப் பிரிவினரே செயற்கை அவயவங்களைப் பெற்றோரில் அதிக தொகையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மிதிவெடியில் பாதிப்புற்றோர்

கால்களைப் பொருத்தியோரில் மிதி வெடி மூலம் கால்களை இழந்தவர்களே அதிக தொகையினர் ஆவர். இவர்களின் தொகை 1269 ஆகும்.

| | அலுமினியம் | பொலிபுறொபலீன் |
|---|---|---|
| முழங்கைக்கு மேல் | 44 | 04 |
| முழங்கைக்கு கீழ் | 76 | 07 |
| மொத்தம் | 120 | 11 |
| ஆண்கள் | 99 | 09 |
| பெண்கள் | 18 | 02 |

கைகளை 11- 20 வயதுப் பிரிவினரில் 53 பேர் செயற்கைக் கைகளைப் பெற்றுள்ளனர். இதுவே அதிக தொகையாகும்.

ஷெல்தாக்குதல் காரணமாக கைகளைஇழந்த 42பேர் செயற்கை கரங்களைப் பெற்றுள்ளனர். கரங்களை இழந்தோரில் ஷெல் வீச்சால் இழந்தோரே அதிகமானோர்.

ஜெய்ப்பூர் நிறுவனம் மூலம் மொத்தம 2355 பேர் கால்களையும் 128 பேர் கைகளையும் பெற்றுள்ளனர்.

**எம். எஸ். எஸ். கீர்த்தி**

**2021,22, ஆம் திகதிகளில் இணுவில் மக்லோட் வைத்திய சாலையில் கண்காட்சி நடைபெற்றது.**

### பொருத்தப்பட்ட விபரம்

1996 ஆண்டு முதல் 2001 ஐப்பசி வரை பொருத்தப் பட்ட செயற்கை கால்களின் விபரம் வருமாறு.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| 1996 | 93 | 25 |
| 1997 | 76 | 23 |
| 1998 | 137 | 53 |
| 1999 | 124 | 39 |
| 2000 | 134 | 66 |
| 2001 | 170 | 43 |

அவயவ இழப்பின் முக்கிய காரணிகளும், விவரமும். குண்டுத் தாக்குதல் ஷெல் தாக்குகல் துப்பாக்கிசூடு மிதி வெடி வேறு.

| | குண்டுத் தாக்குதல் | ஷெல் தாக்குதல் | துப்பாக்கி சூடு | மிதி வெடி | வேறு |
|---|---|---|---|---|---|
| 1996 | 12 | 23 | 4 | 66 | 13 |
| 1997 | 11 | 13 | 3 | 52 | 20 |
| 1998 | 16 | 20 | 1 | 105 | 49 |
| 1999 | 13 | 16 | 2 | 34 | 38 |
| 2000 | 15 | 18 | 2 | 121 | 34 |
| 2001 oct | 17 | 16 | 3 | 113 | 93 |

### தொண்டின் மகத்துவம்

1987 ஆண்டு செயற்பட ஆரம்பித்த ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் குடாநாட்டில் பெருந்தொகையான அங்கவீனர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். வாழ்க்கையை இழந்து மனமுடைந்த நிலையில விரக்தியுடன் இந்நிலையத்தை அடைந்தவர்கள புது வாழ்வு பெற்றுச் செல்கின்றமையைப் பார்க்கின்ற பொழுது இதன் தொண்டின் மகத்துவம் புரிகின்றது.

யுத்தத்தின் கொடூரத்தால் வடக்கு- கிழக்கில் இன்றும் பலர்அங்கங்களைஇழந்தவண்ணமே உள்ளனர். அங்கஇழப்புகள் மனோவியல் ரீதியான பாதிப்புக்களையும ஏற்படுத்துவதோடு ஒரு தாழ்வு மனப் பான்மையையும் நாம் இந்தச் சமூகத்திற்கும் எந்தவகையிலும் பிரயோசனம் அற்றவர்கள் என்றமனோ நிலையையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் கல்வி கற்பவர்கள், தொழில் புரிபவர்கள், சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் தமது முயற்சிகளை முன்னெடுக்க முடியாமல் குடும்பத்திற்குப்பாரமானவர்களாக மாறுகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு மனோதிடத்தை அளிப்பதிலும் ஜெய்ப்பூர் நிறுவனம் முன்னிற்கிறது ஆனால் நிரந்தரமான நிலமோ அன்றிநிரந்தர கட்டடவசதிகளோ இன்றி இணுவில் தனியார் வைத்திய சாலையில்இயங்கிவரும் செயற்கைக்கால் தொழிற்சாலைக்கு சொந்தமான கட்டடம்ஒன்று யாழ். நகரை அண்டிய பகுதியில் அமைவது அவசியமானது இதற்கு நல்லுள்ளங்களின் ஒத்

(2ம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் தட்டுப்பாட்டின் மர்மம் துலங்க
# எந்த வேட்பாளரும் தட்டிக்கேட்க வில்லையே?

யாழ். குடாநாட்டில் நிலவும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு விரைவில நீங்கும் எரிபொருளை ஏற்றிக் கொண்டு கப்பல் காங்கேசன் துறை முகத்தை நோக்கி வருகிறது. இவை தினசரி பததிரிகைகளில் வெளிவரும் செய்திகள்.

எரிபொருள் தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவராத செய்திகளும் உண்டு. இப்போது தேர்தல் காலம் யாழ். நகரவீதிகளில காதைப்பிளக்கும் அனல் தெறிக்கும் வசை மொழிகள் ஏராளம். தேர்தல் களத்தில் 132 வேட்பாளர்கள்.

### எரிபொருள் களஞ்சியத்தில் இருப்பு

காங்கேசன் துறை எரிபொருள களஞ்சியத்தில் குடாநாட்டு மககளின ஒரு மாத தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய சுமார் ஒரு லட்சத்து 85 ஆயிரம் லீற்றர் எரிபொருள் (மண்ணெண்ணெய் டீசல், பெற்றோல்) இருப்பில் இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. இந்த இருப்புடன் கடந்த சனிக்கிழமை (17ம் திகதி) சுமார் 6 லடசம் லீற்றர் சுப்பர் மற்றும் ஓட்டோ டீசல் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுக் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதாக ஒரு தகவல்.

**நக்கீரன்**

இதில் $1\frac{1}{2}$ லட்சம் லீற்றர் சுப்பர் டீசலைப் படைத் தரப்பினர் தமது தேவைகளுக்கு எடுத்துள்ளதாகவும், மிகுதி டீசலில் 3 லடசம் லீற்றர் ஒட்டோ டீசல் கூல் ஏயர் நிறுவனத்திற்குப் போக மிகுதி $1\frac{1}{2}$ லடசம சுப்பர் டீசல் ஏற்கனவே இருப்பில் உள்ள ஒரு லட்சத்து 85 ஆயிரம் லீற்றர் எரிபொருளுடன் சேர்த்து இருப்பில் உள்ளதாகவும் ஒரு தகவல்.

இந் நிலையில் ஒருலீற்றர்மண்ணெண்ணெயையோ பெற்றோலையோ, டீசலையோ மக்களால்பெறமுடியவில்லை. இதனைக் களத்தில் நிற்கும் 132 வேட்பாளர்களில எந்தவொரு வேட்பாளராலும் தட்டிக் கேட்க முடியவில்லை.

### மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம

குடாநாட்டில் சுமார் 18 எரிபொருள் விற்பனை நிலையங்களில் வைத்து பெற்றோலை விநியோகம் செய்த பெற்றோலியக் கூட்டுத தாபனம் எண்ணெய் கப்பல் ஒன்று தாக்குதலுக்கு ஆளானதை அடுத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் 7 எரிபொருள் விற்பனை நிலையங்களில் மட்டும் மட்டுப் படுத்தப்பட்ட அளவில பெற்றோல் விநியோகத்தை மேற்கொண்டுளளது.

வடமராட்சிப் பகுதிகளில் புலோலி, கட்டைவேலி, பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள நிலையங்களிலும், வலிகாமத்தில் அளவெட்டி, மல்லாகம், மானிப்பாய், நல்லூர், பண்டத்தரிப்பு நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க

(6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்
## சக்தி பூஜை

ஒன்று மறியா இருளாம் உள்ளம்படைத்த எனக்கு என்று கதிவருவது? எந்தாய் பராபரமே!

**தாயுமானவர்**

நான் பொல்லாதசேய் எனினும் தாயாகிய நீ என்னைத் தள்ளுதல் நீதமோ? உன்னையன்றி எனக்குப் புகல் இடம ஏது?

தாயின் வாஞ்சையை அறிகிறவன் தெய்வத்தின் கருணையை அறிகிறான். கருத்தரித்த நாள் முதல் காலமெல்லாம் தன் குழந்தைக் கென்றே வாழ்ந்திருப்பவள் தாய். அன்னை பராசக்தி உயிர்களைப் பரத்திடம் சேர்க்கும் வரையில் தனது கருணா கரக்கண்காணிப்பைச் செலுத்தி வருகிறாள்.

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.**

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



# ஆசிய பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்கா இராணுவ உதவியை வழங்கும்!

## பசுபிக்பிராந்திய அமெ. படைத் தளபதி தெரிவிப்பு

[கோலாலம்பூர்]

ஆசியப் பிராந்தியத்தில் பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவிடம் எந்த நாடு உதவி கோரினாலும் அந்த நாட்டுக்கு அமெரிக்கா நிச்சயம் இராணுவரீதியான உதவி செய்யும் இவ்வாறு பசுபிக் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதியான அட்மிரல்பிளயர் கோலாலம்பூரில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், பயங்கர வாதம அழித்தொழிக்கப்பட வேண்டிய என்ற கொள்கையைப் பகிர்ந்து கொள்வதில்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் ஒத்துழைப்பதே அமெரிக்காவின் முக்கியநோக்கமாகஇருக்கும்.

ஆசிய மற்றும் பசுபிக்பிராந்தியங்களில் இடம்பெறும் சட்ட விரோத ஆட்கடத்தல், போதைவஸ்துக் கடத்தல், சர்வதேச குற்றச் செயல்களைப் புரிதல் ஆயுதக் கடத்தல் ஆகியவற்றை]அழித்தொழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் வர்த்தகக் கப்பல் ஒன்றுபயங்கரவாதிகளினால் கைப்பற்றப் பட்டால் அப்பகுதியில் அமெரிக்க கடற்படையினர் தரித்து நின்றால் அங்கு இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா நிச்சயம் ஈடுபடும்.

எந்தவொரு பாயங்கரவாதிக்கும் எந்த நாடும்புகலிடம் அளிக்க முடியாது பயங்கரவாதம் எந்த நாட்டில் இருந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளவும் முடியாது.

அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாதமும், இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதமும் முடிவுக்கு வராதவரை பயங்கரவாதத்திற்குஎதிரான யுத்தம் முடிவடையாது என்றும் அட்மிரல் பிளயர் குறைத்துள்ளார். (ம)

### தேர்தல்

...கான கடிதங்களை சம்மந்தப் பட்ட அதிகாரிகளைப் பெற றுக்கொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளது. (5-19)

### ஏ எல் பரீட்சை

உயர்தரப்பரீட்சை முடிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை வெளிவரவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை முடிவுகளை நாளைமறுதினம் திங்கட் கிழமை காலை இன்ரநெற் மூலம் அறிந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (வ)

### ஜே. வி. பி

...மூலம்பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் இணைந்து ஆட்சியமைக்கும் முயற்சியில் ஈடுபடுவது வெளிச்சத்திற்கு வந்துள்ளதெனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# மகேஸ்வரனின் பிரசாரம் குறித்து தேர்தல்ஆணையாளரிடம், முறையீடு

## ஈ.பி.டி.பி அறிவிப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் ஐ தே.க கட்சியின் முதன்மை வேட்பாளர் தியாகராசா மகேஸ்வரன் வாக்காளர் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை மிரட்டி அச்சுறுத்தும் வகையில் மேற்கொள்ளும் பிரசாரங்கள் தொடர்பாக ஈ.பி.டிபியின் செயலாளர் நாயகம் கே என். டக்ளஸ் தேவானந்தா தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இவ்வாறு ஈ.பி.டி.பி யின் யாழ்தலைமைச்செயலகம்விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அரசாங்க உத்தியோகத்தர்கள் அடுத்துவரும் தமது கட்சியின் ஆட்சியில் பழிவாங்கல்களுக்கு இலக்காவார்கள் என்னும் சாரப்படவும் தற்காலிக ஊழியர்களின் வேலைவாய்ப்புக்கள் பறிக்கப்படும் எனவும் இடமாற்றங்களுக்கு உள்ளாகலாமெனவும் மகேஸ்வரன் கூறியிருக்கிறார்.

இவை தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ள அமைச்சர் டக்ளஸ் இதுஅடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுக்கும் செயலாகும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### பிரதமரல்லது

அரசின் மீதான இக்குற்றச்சாட்டை எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (வ)

### ஐ தே,க

கூட்டத்தில் சோமவன்ச மேலும் உரையாற்றுகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவறான நடவடிக்கைகளேஎம்மை ஆயுதப் போராட்டத்திற்கு தூண்டியது ஆனால்இப்போது நாம் ஜனநாயக நீரோட்டத்தில் முன்னேறி வருகிறோம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை உள்ளடக்கிய ஒரே அமைபபு ஜே.வி.பி தான்என்றும் அவர் மேலும் கூறினார். (வ)

### சரத்முனசிங்கா

இவ் உததரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை பிரிகேடியர் சரத் முனசிங்கவிற்குரிய பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டுமென்று மனித உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது, (வ)

### பாக்கியநாதன்

ஆலோசகர் கலாநிதி விக்கினேஸ்வரன் மற்றும் ஸ்ரீபன் ஆகியோர் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்

இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட மேல் முறையீட்டு நீதி மன்று நீதியரசர் நிமால்காமினி அமரதுங்க மனுவை தள்ளுபடி செய்தார் [ந 4]


## ஐக்கிய தேசியக் கட்சி
## யாழ். மாவட்டம்

**19வது 20வது பிரசாரக் கூட்டம்**

இடம்: நாவாந்துறை சந்தை முன்றல்
காலம்: இன்று (2001-11-24) பிற்பகல் 2 மணி

இடம்: இருபாலைச் சந்திக்குஅருகாமையில்
காலம்: இன்று (2001-11-24) பிற்பகல் 4-30 மணி

சிறப்புரை: **திரு. தி, மகேஸ்வரன்**
[ஐ. தே. கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் எம். பியும் முதன்மைவேட்பாளரும்]

அனைத்துத் தமிழ் நெஞ்சங்களையும் வருக வருக வென அன்புடன் அழைக்கின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சி
யாழ். மாவட்டம்

(கி- 2921)



## நாவற்குழி வணிகர்கழக அறிவித்தல்

நாவற்குழி வணிகர்கழக இழப்பீடு சம்மந்தமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிப 1 00மணியளவில் ஸ்ரான்லிவீதியில் உள்ள ஸ்ரீதர் தியேட்டர் அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுடன் கலந்துரையாட இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம.

தலைவர்
து. ஐயாத்துரை

(கி-2920)

செயலாளர்
இ. சிவானந்தம்

சிறப்புரை: **திரு. தி, மகேஸ்வரன்**

[ஐ. தே. கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் எம். பியும் முதன்மைவேட்பாளரும்]

அனைத்துத் தமிழ் நெஞ்சங்களையும் வருக வருக வென அன்புடன் அழைக்கின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சி
யாழ். மாவட்டம்

(கி- 2921)

ளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். (வ)

**பாக்கியநாதன்**

ஆலோசகர் கலாநிதி விக்கினேஸ்வரன் மற்றும் ஸ்ரீபன் ஆகியோர் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்

இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட மேல் முறையீட்டு நீதி மன்று நீதியரசர் நிமால்காமினி அமரதுங்க மனுவை தள்ளுபடி செய்தார் [ந 4]

## நாவற்குழி வணிகர்கழக அறிவித்தல்

நாவற்குழி வணிகர்கழக இழப்பீடு சம்மந்தமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிப 1 00மணியளவில் ஸ்ரான்லிவீதியில் உள்ள ஸ்ரீதர் தியேட்டர் அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுடன் கலந்துரையாட இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம.

தலைவர்
து. ஐயாத்துரை

(கி-2920)

செயலாளர்
இ. சிவானந்தம்

# பொதுத் தேர்தல் - 2001
## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு
# அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



மாமனிதர்

"நான் ஒரு சுயமரியாதையுள்ள தமிழனாகவே வாழ விரும்புகின்றேன் நான் ஒரு அடிமையாக வாழ்ந்து இனத்துவேசிகளும் ஆட்சியில் உள்ளவர்களும கூறுபவைகளுக்குத் தலையாட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை"

மாவிரன் குமார்-

**அந்நியர்களுக்கு வால் பிடித்து வாளோம்**
**அநீதியை என்றும் எதிர்த்து நிற்போம்**
**எம்மக்களுக்காக என்றும் உழைப்போம்**

**திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி** இல: 1

**திரு. சி. வி. கந்தையா சிவஞானம்** இல: 5

**திரு. கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்** இல: 8

சுயநிர்ணய உரிமையுள்ள ஓர் தேசிய இனம் தனது சுதந்திரத்திற்காகப் போராடுவது சரியானதேஎன்று வாதாடுவோம்.

## அடிமை வாழ்வு அகலட்டும் சுதந்திர வாழ்வு மீளட்டும்

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

எங்கள்விருப்புவாக்குகள்
மூன்றும்
மாமனிதரின் கட்சிக்கே

| X | 2 | 3 | 4 | X | 6 | 7 | X | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

கோப்பாய் வாழ் மக்கள்.

(3946)

இப்பத்திரிகை" வலம்புரி" அச் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 நவம்பர் 24ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;